# ஸ்ரீ காந்திமதி அருள்மாலை

பொருநையில் நீராடி பொட்டிட்டு
புத்தாடை அணிந்து பூரித்து
கருணையே அலங்கார மாய்தரித்து
கண்ணுக்குக் கவிதையாய் மையெழுதி
பெருமையாய் அப்பனின் கைப்பிடித்து
பெண்மைக்கு இலக்கணமாய் அமர்ந்தவளே !
உரிமையாய் அழைக்கின்றேன் ஓடிவந்து
உள்ளத்தில் சுடர்விடுவாய் ஒளிவிளக்காய்!

தாய்ப்பால் உண்டசேய் சிரிப்பதைப்போல
தமிழ்ப்பால் உண்டவர் திளைப்பதைபோல
மூப்பால் ஞானம் முதிர்வதைப்போல
முகிழ்ப்பால் வசந்தம் வருவதைப்போல
காப்பாள் காந்திமதி என்கின்ற நினைப்பால்
கவிப்பால் சொரிந்தவளை குளிர்விக்கின்றேன்.
தாழ்ப்பாள்விலக்கி தரிசனம் கொடுப்பாய்
தவிப்பால் உன்மகன் கேட்கின்றேன் தாயே!

நெல்லுக்கு வேலிபோட்டான் நெல்லையப்பன்
நெருங்கிய பக்தனைக் காப்பதற்கு!
சொல்லுக்கு வேலி போட்டான் சொக்கநாதன்
சொற்பிறழா திருக்குமாறு புலவனுக்கு
நாவுக்குச் செம்மை சேர்த்து நானிலத்தில்
நால்வரின் பண் கேட்டு மெய்சிலிர்த்தான்
பூவுக்குப் பூவான புண்யவதி காந்திமதி
புன்னகைக்கும் காரணமாய் இருக்கின்றாள்.

காதலித்து சிவனாரின் கரம்பிடித்து
கல்யாண கோலத்தில் காட்சிதந்தாய்
வளைகாப்பு நாளன்று மாதரெல்லாம்
வளைபூட்டி மகிழ்கின்றார் உன்னருளால்
தழைக்கின்ற கொடியாகி தங்கள்வம்சம்
தழைப்பதற்கு உன்பாதம் பணிகின்றார் !
மழை மேகக்கண்ணாளே ! நீ பொழிய
மணிவயிறு சூல்கொண்டு மகிழ்கின்றார் !

# ஸ்ரீ காந்திமதி அருள்மாலை

ஒவ்வொரு நாளும் சந்நிதியில்
ஓராயிரம் பாடல் ஒலிக்கிறது
ஒவ்வொரு நாளும் உன்முன்பு
ஓராயிரம் மனங்கள் துதிக்கிறது.
ஒவ்வொரு நாளும் உனை நோக்கி
ஓராயிரம் கரங்கள் குவிகிறது !
ஒவ்வொரு நாளும் பாதத்தில்
ஓராயிரம் சிரங்கள் பணிகிறது !

வருடத்தில் பாதிநாள் தவமிருப்பாய்
வழங்குவாய் வரமெல்லாம் மீதிநாளில்
திருவிழா காலத்தில் அரனோடு
தேரேறி வீதிகளில் வலம் வந்து
தெரியாத பக்தருக்கும் அருள்புரிவாய் !
தீஞ்சுவைப் புன்னகையால் தீண்டிடுவாய்
மறுமைக்கும் சொத்தாக உன்னருளை
மனதுக்குள் பூட்டிவைத்த பக்தன் நான்!

குடமுழுக்கு நன்னீரால் சிரம்நனைய
கும்பிட்டோர் கண்ணீரால் பதம்நனைய
விடையேறிய பெம்மானின் வாயுண்ட
விஷம்முறிய இதழ்பதித்த நாயகியே!
கடைத்தேற காத்திருக்கும் பக்தர்களை
கண்களால் வழிநடத்தும் தாயவளே
குடைவிரித்தேன், சாமரத்தால் குளிர்வித்தேன்
குலம்தழைக்க கடைக்கணிப்பாய் காந்திமதி!

மறந்தமகனை தாய் அழைத்தாள்
மடியில் அமர்த்தி முத்தமிட்டாள்
சிறந்த வாழ்க்கையும் செவ்வியநெஞ்சமும்
சேர்த்துக் கொடுத்துக் செப்பனிட்டாள்
கறந்த பாலவள் கனிந்த கனியவள்
காந்தி மதிஎனும் கற்பகத்தாள்
பிறந்தபிறவியின் பேறு பெற்றேன்
பிறந்தால் மீண்டும் தாயவளே

குற்றாலம் வள்ளிநாயகம்